தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர் ௪௫	திருவள்ளுவர் யாண்டு ௨௰௰௨ விரோதிகிருது, ஆடி (1971 — ஜூலை — ஆகஸ்டு)	மலர் ௪

படர்க்கை இடப்பெயர்கள்

(டாக்டர் மோ. இசரயேல், எம். ஏ., பி. எச். டி.)

தமிழ் மொழியில் தன்மை, முன்னிலை, படர்க்கை என மூவிட வேறுபாடு உள்ளது இம்மூவிடங்களிலும் வெவ்வேறு இடப் பெயர்கள் தொன்று தொட்டு வழங்கி வந்துள்ளன. தொல் காப்பியனர் காலத்தில் யான், யாம், நாம் என்னும் தன்மைப் பெயர்களும், நீ, நீயிர் என்னும் முன்னிலைப் பெயர்களும், தான், தாம் என்னும் படர்க்கைப் பெயர்களும் வழக்கில் ஆட்சிபெற் றிருந்தன. ஆனல் தற்காலத் தமிழில் படர்க்கை இடத்தில் "தான், தாம்" என்னும் பெயர்களுக்குப் பதிலாக அவன், அவள், அது, அவர், அவை போன்ற சுட்டுப்பெயர்கள் இடப் பெயர்கள் ஆட்சி பெற்றுவிட்டன.

"தான், தாம் என்பன பழந்தமிழில் படர்க்கை இடப்பெயர்களே"

டாக்டர் கால்டுவெல் என்னும் திராவிட மொழியியல் அறிஞர் -'திராவிட மொழிகள் வேறு பல தனி நிலைத் தொன்மொழிகளைப் போலவே, படர்க்கை இடப் பெயர்களைக் பெற்றிருக்கவில்லை; அவற்றிற்கு மாருகத், திணை, பால், எண்களை உணர்த்தும் விகுதிகள் இணைந்த சுட்டுப் பெயர்கள் வழங்குகின்றன" [1] என் கிருர். பி, சுப்பிரமணிய சாத்திரி அவர்கள் 'சுட்டுப்பெயர்கள் படர்க்கை இடத்தில் வழங்குதலால் தமிழில் தனிப்பட்ட படர்க்கை இடப்பெயர்கள் இல்லை" [2] என்கிருர். இன்னேரன்ன கூற்றுக்களை ஆராய்ச்சியாளர் ஒப்புக்கொள்ளுதல் அரிதாகும். ஆனல் தமிழ் மொழியின் பிற்கால வழக்கைப் பொறுத்த அளவில் இக்கூற்றுக் கள் பொருந்தும். தொல்காப்பியர் காலத்தில் அல்லது சங்க

இலக்கிய காலத்தில் தன்மை முன்னிலை இடப்பெயர்களைப் போன்றே தனிப்பட்ட படர்க்கை இடப்பெயர்கள் வழங்கி உள்ளன. தொல்காப்பியனார்,

தாமென் கிளவி பன்மைக் குரித்தே (தொ. சொ. 184)
தானென் கிளவி ஒருமைக் குரித்தே (தொ. சொ. 185)

என்று கூறி உள்ளார். டாக்டர். பி. சுப்பிரமணிய சாத்திரி அவர்கள் "தொல்காப்பியனார் தான், தாம் என்பன முறையே ஒருமையிலும் பன்மையிலும் வழங்கும் என்கிறார். அவை படர்க்கையில் மட்டும் வழங்கும் என்று கூறவில்லை" [3] என்று கூறித் தமது கருத்தை உறுதிப் படுத்த முயற்சி செய்கிறார். ஆனால் சுவாமிநாத ஐயர் அவர்கள், டாக்டர் கமில் சுவலபில் ஆகியோர் "தான், தாம் என்பவைதாம் பண்டைக் காலத்தில் படர்க்கை இடப்பெயர்களாக வழங்கி வந்தனவாகும் பிற்காலத்தில்தான் சுட்டுப் பெயர்கள் அவற்றின் இடத்தில் ஆட்சி பெற்றிருக்கலாம்" [4] என்று தெளிவாகக் குறிப்பிடுகின்றனர்.

தான். தாம் என்பவைதாம் பண்டைக்காலப் படர்க்கை இடப் பெயர்கள் என்பதற்குப் பல விளக்கங்களைத் தருதல் இயலும்.

1. அவை சங்க இலக்கியங்களில் படர்க்கை வினைகளில் எழுவாயாக வழங்குகின்றன.

எ—டு 1. கொண்கன் யான் யாய் அஞ்சுவல் எனினும்
தானே பிரிதல் சூழான் (நற். 72)

2. செம்பொற் கொடியனையாள் கண்டாளைத்
தான் காணான் (சிலப். 19. 30)

2 தொல்காப்பியத்தின் எல்லா உரையாசிரியர்களும் தரும் எடுத்துக்காட்டுகள், இவை படர்க்கை இடப்பெயர்கள் என்பதைத் தெளிவுபடுத்துகின்றன.

தான் வந்தான்
தான் வந்தாள் } தாம் வந்தார்.
தான் வந்தது } தாம் வந்தன.

3. பொதுவாகப் பெயர்ச் சொற்கள் திணை, பால், எண் வேறுபாடு உடையனவாகத் தமிழ் மொழியில் அமைந்துள்ளன. ஆனால் தன்மை முன்னிலை இடப்பெயர்களில் திணை,

பால் வேறுபாடு காணப்படாது எண் வேறுபாடு மட்டும் உள்ளது. இதே இயல்பைத் தான் "தான், தாம்" என்னும் பெயர்களும் பெற்றுள்ளன. இவற்றிற்கும், திணை, பால், வேறு பாடு கிடையாது.

	தன்மை	முன்னிலை	படர்க்கை
ஒருமை ;—	யான்	நீ	தான்
பன்மை :—	யாம்	நீயிர்	தாம்

சுட்டுப்பெயர் வினுப்பெயர் ஆகியவற்றிலும் திணை. பால் வேறுபாடு உள்ளமை கவனித்தற்குரியது.

4. தன்மை, முன்னிலை இடப்பெயர்களில் 'ன' கரம் ஒருமையையும் 'ம'கரம் பன்மையையும் குறித்தல் போன்று இவற்றுள்ளும் 'ன'கரம் ஒருமையையும் 'ம'கரம் பன்மையையும் குறித்து நிற்கின்றன.

ஒருமை :	யா-ன்	நா-ன்	எ-ன்	நி-ன்	தா-ன்	த-ன்
பன்மை :	யா-ம்	நா-ம்	எ-ம்	நு-ம்	தா-ம்	த-ம்

5 வேற்றுமை உருபேற்குங்கால் தன்மை முன்னிலை இடப்பெயர்களில் உள்ள நெடில் உயிர்கள் குறுகுதல் போன்று இவற்றின் உயிரும் குறிலாகின்றது-

எழுவாய் வடிவம் :	யான்	நாம்	நீ	நீயிர்	தான்	தாம்
உருபேற்கும் வடிவம் :	என்	நம்	நின்	நும்	தன்	தம்

6. தொல்காப்பியனுர் எல்லாம் தன்மையிலும், எல்லீ நம். முன்னிலையிலும், எல்லாரும் படர்க்கையிலும் வழங்கும் என்கிருர் (தொ. எ. 191; தொ சொ. 187) அவை வேற்றுமை உருபேற்குங்கால் முறையே நம், நும், தம் என்னும் வடிவங்கள் இடையே செருகப்படுகின்றன. இவ்வடிவங்களை உரையாசிரியர் "சாரியைகள்" எனக் குறிப்பிடுகின்றனர். ஆனுல் இவை இடப்பெயர்களின் உயிர்குறுகிய வேற்றுமை உருபேற்கும் வடிவங்கள் ஆகும் தன்மையில் வழங்கும் 'எல்லாம்' என்பதில் தன்மைப் பன்மை இடப்பெயரின் உயிர் குறுகிய வடிவாகிய "நம்" இணைக்கப்பட்டு 'எல்லா நம்மொடும்' எனவும் (தொ. எ. 190) முன்னிலையில் முன்னிலைப் பன்மைப் பெயரின் உயிர் குறுகிய வேற்றுமை உருபேற்கும் வடிவாகிய 'நும்' இணைக்கப்பட்டு 'எல்லீர் நும்மையும்', 'எல்லீர் நும்மொடும்' எனவும் (தொ. எ. 191) வழங்குகின்றதாயிருத்தலின், படர்க்கையில்

'எல்லார் தம்மையும்'. 'எல்லார் தம்மொடும்' (தொ. எ. 191) என வழங்குவனவற்றுள் இணைக்கப்பட்டிருக்கும் "தம்", 'தாம்' என்னும் பெயரின் நெடில் உயிர் குறுகி அமைத்த வடிவமாகத்தான் இருத்தல் வேண்டும். இவ்வுண்மை, படர்க்கை இடத்தில் வழங்கிய பன்மைப் பெயர் 'தாம் என்பதை உறுதி செய்து நிற்கின்றது.

7. கி. பி. பன்னிரண்டாம் நூற்றுண்டினரான பவணந்தி முனிவர் தாம் இயற்றிய நன்னூலில் ஒரு நூற்பாவின்கண் (நன். 285) தன்மை, முன்னிலை இடப்பெயர்கள் இவை எனக் குறிப்பிட்ட பின்னர் "அல்லன படர்க்கை" எனக் கூறுகின்றுர் (நன். 285). தொடர்ந்தாற்போல் மூவிடப் பெயர்களுக்கும் எண் வேறுபாடு கூறுங்கால், 'தான்' ஒருமையிலும் 'தாம்' பன்மையிலும் வழங்கும் (நன். 287) என்று குறிப்பிடுவதினின்று அவை படர்க்கைப் பெயர்களே என்பதைத் தெளிவுபடுத்துகிறுர்

காலப்போக்கில் "தான், தாம்" அடைந்துள்ள வழக்கு வேறுபாடுகள்.

தொல்காப்பியனுர் காலத்தில் தான், தாம் என்பனவே படர்க்கை இடப்பெயர்கள், அவன், அவள், அவர், அது, அவை, இவன், இவள், இவர், இது, இவை, உவன், உவள், உவர், உது, உவை, அவ், இவ், உவ், அஃது இஃது, உஃது. என்பன படர்க்கைச் சுட்டுப்பெயர்களே [5] தான் வந்தான், தான் வந்தாள் தான் வந்தது, தாம் வந்தார், தாம்வந்தன. போன்ற வழக்குகளை இப்போது பேச்சு, எழுத்து மொழியில் காண்பதரிது. இக்காலத் தமிழில்,

அவன் வந்தான், அவள் வந்தாள், அவர் வந்தார், அது வந்தது, அவை வந்தன என்பன போன்ற தொடர்களே அவற்றிற்கு ஈடாக வழங்குகின்றன.

1. தொல்காப்பியனுர் காலத்தில் படர்க்கை இடப்பெயராக வழங்கிய இவை உரிமை வாழ்விழந்து இடைச் சொற்கள் போலத் தமக்கியல்பிலவாய்ப் பெயர் வினைகளை மருவி வாழத் தொடங்கி விட்டன.

எ—டு. அவள் தான் செய்தான் (அவனே செய்தான்)
அவர் தாம் செய்தார் (அவரே செய்தார்)

2 இவை படர்க்கை இடப்பெயர்களைத் தழுவி நிற்கும் துணை இடப்பெயராயும் (reflexive pronouns) செயலாற்றின.

எனினும் இவை எண் வேறுபாடு உடையனவாகவே இருந்தன. இத்துணைப் பெயர்கள் எழுவாயின் பொருளுக்குச் சிறப்புக் கொடுத்து நின்றன.

1. அன்னை தான் அறிந்து அன்றோ இலளே (நற். 175)
2. குறுமகள்......தீங்குரல் கிளியும் தாம் அறிபவே (நற். 209)

இவற்றுள் தான். தாம் என்பன துணை இடப்பெயராக நின்று 'தான்' அன்னை என்ற எழுவாயையும் 'தரம்' கிளி என்ற எழுவாயினையும் தழுவிப் பொருட் சிறப்புச் செய்கின்றன.

இடைச் சொல்லாகப் பயன்படுங்கால் இவை இடம், எண் ஆகிய வேறுபாடுகளைக் குறித்தல் இல. எனினும் துணை இடப்பெயர், இடைச் சொல் வழக்குகளை அறவே வேறுபடுத்திக் காட்டுதல் அரிது. சில இடங்களில் ஒன்றே துணை இடப்பெயராகவும் இடைச் சொல்லாகவும் செயலாற்றும்.

எ—டு. காதல் தானும் கடலினும் பெரிதே (நற். 166)

3. பின்னர் அவை படர்க்கையில் வழங்கும் நிலை படிப் படியே மாறி இடப் பொருளை, உணர்த்தும் தன்மை இழந்து, மற்ற தன்மை முன்னிலைச் சொற்களையும் சார்ந்து முழு அளவில் இடைச் சொற்களாக வாழத்தலைப்பட்டன.

எ—டு. நான் தான் படித்தேன் (நானே படித்தேன்)-தன்மை
நீ தான் எடுத்தாய் (நீயே எடுத்தாய்)-முன்னிலை
நீர் தாம் கொடுத்தீர் (நீரே கொடுத்தீர்)-முன்னிலை

இவற்றுள் தான், தாம் என்பன படர்க்கைப் பொருளை முற்றிலும் இழந்துள்ளமை காண்க.

'தான்' ஒருமையும் 'தாம்' பன்மையும் குறிக்கும் என்பது தொல்காப்பியனார் கூறும் இலக்கணம் (தொ. சொ. 184. 185). ஆனல் இக்காலத்தில் அவை ஒருமை பன்மையாகிய வேறுபாட்டையும் உணர்த்தாத நிலையில் வழங்குகின்றன.

எ—டு. அவன் தான் எடுத்தான்
நாங்கள் தான் வந்தோம்
அவர் தான் சொன்னர்
நீங்கள் தான் செய்தீர்கள்

இங்குத் 'தான்' என்ற சொல்லே ஒருமை, பன்மை இரண்டையும் உணர்த்தி, 'தாம்' என்பதை வழக்கு அறச் செய்வதைக் காணலாம்.

படர்க்கை இடப்பெயர்களுடன் அமைந்த சொற்கள்

1. தன்மை	2. முன்னிலை	3. படர்க்கை	
தந்தை	நுந்தை	தந்தை	தம்-த்-ஐ
ஆய்	ஞாய்	நாய்	த்-ஆய்
எம்பிரான்	நும்பிரான்	தம்பிரான்	தம்-பிரான்
எம்முன்	நும்பின்	தம்முன்	தம்-முன்
எம்பி	நும்பி	தம்பி	தம்-பி(ன்)
எங்கை	நுங்கை	தங்கை	தம்-கை
எமர்	நுமர்	தம்	தம்-ஆர்
		தகப்பன், தமப்பன்	தம்-அப்பன்
		தமக்கை	தம்-அக்கை
		தனையன்	தன்-ஐயன்

மூன்றுவது நிலையில் இருப்பன யாவும் ஒரு காலத்தில் படர்க்கை இடத்து முறைப் பெயர்களாக வழங்கின. அவற்றின் முதல் உறுப்பு 'தாம்' (அல்லது தான்) என்னும் படர்க்கை இடப் பெயரின் உயிர் குறுகிய அல்லது சிறிது திரிந்த வடிவமே யாகும். எனவே. அவை அவர் தந்தை, அவன் தம்பி. அவள் தாய் என்று படர்க்கையில் மட்டும் வழங்கிப் பின்னர் ஏனைய இடங்களில வழங்கத் தொடங்கி இருக்கலாம். பண்டைக் காலத்தில் எந்தை, நுந்தை, எம்பி, நும்பி, ஆய், ஞாய் போன்ற தன்மை முன்னிலை முறைப் பெயர்களும் வழக்கில் பயின்று, காலப் போக்கில் மறைந்து போயின. இன்று அவற்றின் இடத்தில் படர்க்கை முறைப் பெயர்களே ஆட்சி பெற்றுவிட்டன.

தந்தை, தம்பி, தங்கை போன்ற முறைப்பெயர்களில் படர்க்கைப் பெயரின் வடிவம் அமைந்திருப்பினும் அவை படர்க்கை இடப்பொருளை இழந்து, எல்லா இடங்களுக்கும் பொதுவான முறைப் பெயர்ச் சொற்களாக வழங்க இடந்தருகின்றன.

எ—டு. என் தங்கை, உன் தந்தை, அவன் தந்தை
என் தம்பி, உன் தம்பி, அவன் தம்பி

இவற்றிற் காணும் படர்க்கை இடப் பெயரின் வடிவம் பொருளை இழந்ததோடு அமையாது ஒருமை பன்மை உணர்த்தும் இயல்பையும் இழந்து நிற்கின்றது.

எ—டு. என் தந்தை உன் தம்பி அவன் தங்கை
எம் தந்தை உம் தம்பி அவன் தங்கை

தந்தை, தம்பி, தங்கை போன்ற சொற்களில் முதலுறுப்பு 'தம்' ஒருமை பன்மை வேறுபாடு அற்று வழங்குகின்றது.

பழங்காலத்தில் "தான், தாம்" என்பன படர்க்கை இடப் பெயர்களாக வழங்கிச் சிறப்பிடம் பெற்று உரிமை வாழ்வு நடத்தியவை; காலப்போக்கில் அவை உரிமை வாழ்வை இழந்து, துணை தேடிச் சார்ந்து வாழும் இயல்பை அடைந்துவிட்டன. அவை இணைந்து அமைந்த சொல்லுருவங்களில் அவற்றின் பொருளுணர்ச்சியே முற்றிலும் மறைந்து விட்டது என்பதும் அறியத்தகும்.

அடிக்குறிப்புகள்

1. Caldwell, R. A Comparative Grammar of Dravidian Languages, p. 420
2. Subrahmany Sastri, P. S., HIstory of Grammatical Theories in Tamil, P. 125.
3. Ibid p. 137.
4. Swaminatha Aiyar, R The Aryan Affinities of Dravidian, Oriental Conference, 1952, p. 186.

   Zvelebil, K. Personal Pronouns in Tamil and Dravidian, Indo-Iranian Journal. VI (1962) p. 67.
5. தொல்காப்பியம் சொல்லதிகாரம், 162, 167, 174, 184, 185.

திருக்குறட் கருவூலம்

(அகர முதல)

நக்கீரன் வழியடிமை வித்துவான். பி. மா. சோமசுந்தர முதலியார்,
இராணிப்பேட்டை.

ரு. முப்பாலும் நாற்பாலும்

வான்புகழ் கொண்ட வள்ளுவப் பெருந்தகை திருக்குறளை முப்பாலாகவே முறைப்படுத்து மொழிந்தருளினர். திருக்குறளுக்கு முப்பால் என்றே ஒரு பெயருண்மையும், ஏனைய பெயர்களினும் இப்பெயரே பழம் பாடல்களிற் பெருவரவிற்றுதலும் இவ்வுண்மையை யுணர்த்துவ நூல் முப்பாலாய் மிளிர்தரினும் நாற்பாலையும் நன்குணர்த்துவதென்பதே நல்லாசிரியன்மார் துணிபு.

(அ) "தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளா
லானு வறமுதலா வந்நான்கும்"

(ஆ) "அறம்பொரு ளின்பம்வீ டென்னுமந் நான்கின்
திறந்தெரிந்து செப்பிய தேவை"

(இ) "தப்பா முதற்பாவாற் ருமாண்ட பாடலினுன்
முப்பாலி னுற்பான் மொழிந்தவர்"

(ஈ) "இன்பம் பொருளறம் வீடென்னு மிந்நான்கு
முன்பறியச் சொன்ன முதுமொழிநூல்"

(உ) "அறமுத னுன்கு மகலிடத்தோ ரெல்லாந்
திறமுறத் தேர்ந்து தெளிய"

(ஊ) "மும்மையின், வீடவற்றி னுன்கின் விதிவழங்க வள்ளுவனுர்
பாடின ரின்குறள் — வெண் பா."

(எ) "ஒருவ ரிருகுறளே முப்பாலி னேதத்
தரும முதனுன்குஞ் சாலும்"

(ஏ) "அறனறிந்தே மான்ற பொருளறிந்தே மின்பின்
திறனறிந்தேம் வீடு தெளிந்தேம்."

என முறையே, நக்கீரனுர், மாமூலனுர், கீரந்தையார் நரிவெரூஉத்தலையார், கோவூர்கிழார், இழிகட்பெருங்கண்ணனுர், களத்தூர்கிழார், கொடிஞாழன்மாணிபூதனுர் ஆகியோர் போற்றினரென்று திருவள்ளுவமாலை யுணர்த்தலே இவ்வாய்மையை வழுத்துமென்க

திருக்குறள் வீடுணர்த்தும் நூலென்பதே பரிமேலழகர் தம் துணிபாம். அது, "அவற்றுள் வீடென்பது சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின் துறவறமாகிய காரண வகையாற் கூறப்படுவ தல்லது இலக்கண வகையாற் கூறப்படாமையின் நூல்களாற் கூறப்படுவன ஏனை மூன்றுமேயாம்." என வரூஉம் அவர்தம் உரைப்பாயிரத்தாற் பெறப்படும். ஆகலினன்றே, அவரது உரைச் சிறப்புப்பாயிரச் செய்யுளும்,

"அறம்பொரு ளின்பம் வீடென நான்கின்
திறந்தெரிந் துரைத்த செவ்வி முப்பால்"

என்றிசைப்பதாயது.

பிற்றைநாட் பேராசிரியன் மார்க்கும் இஃதே கருத்தென்பது, தவத்திரு சாந்தலிங்க அடிகளாரருளிய "வைராக்கிய தீபம்" என்னும் நூலில்

"ஈதலே யறமு மறித்தமா மனைதது மிகழ்ந்துகை விடுதலே வீடு
மாதலாற் றுனக் குரியவில் வாழ்க்கை யதனையே யறமெனக்
கோகிலா வீட்டி லிலக்கண மிருத்தல் குறித்துமெய் யுணர்வையுந்துறவூ
டோதினர் வேதந் தனைத்தமி ழுருவத்தொளித்தெமக் களித்தவள்ளுவரே"

எனவரும் பாடலாலும் அறியலாகும்.

அற்றேலஃது தங்ஙனமாக, வடமொழி நூல்களை யொப்பத் திருக்குறள் வீட்டினை விரித்துரைத்திலதேயெனிற் கூறுதும். வீட்டிலக்கணம் விரித்த அவ் வடநூல்கள் வீடெய்தற்குரியஒழுகலாறுகளைத் தத்தமக்கு வேண்டியவாறே நுதலிப் புகுந்து, வீட்டியல்புரைப்பான்புக்கு மயங்கியிடர்ப்பட்டுந் தம்முள் முரண்பட்டும் முடிந்தன. இந்நீர்மையே சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்து வீடு என்ற பரிமேலழகர் தம் உரைமாட்சியை யுரைக்கும். இதனானன்றே, எல்லாம் வல்ல இறைவரும் "எல்லா மாயல்லதுமா யிருந்ததனை யிருந்தபடி யிருந்து காட்டி"னார் என்று போற்றப்படுகின்றார்.

யாழ்ப்பாணம், வடகோவை, சபாபதி நாவலரும்

"இனி வீடுபேற்றிய னுதலியெழுந்த வேதாந்த சித்தாந்த நூல் களும் வீட்டியற் பொருட்டிறஞ் சிரவணம் மனனம் என்னுமிரு திறத்தால் தடத்தமாகவுஞ் சிரவண மனன நிதித்தியாசன நிட்டையென்னு நாற்றிறத்தாற் சொரூபமாகவுஞ் சாதன வகை யாற் கூறினவேயா மென்க.

"திருக்குறள் அறம்பொருளின்பம் வீடென்னும் உறுதிப் பொருள் நான்குந் திறப்படக் கூறு முழு நூலேயா மென்றும், நக்கீரனுர் முதலியோர் அப்பெற்றிநேர்ந்தே. அஃது அறமுதலிய வுறுதிப் பொருள் நான்குந் தெளித்துரைக்குந் தமிழ்மறை நூலாமென்றங்ஙன மதனைச் சிறப்பித்துப் பாயிரஞ் செய்தா ரென்றுமுணர்க...நச்சினுர்க்கினியர் இப்பெற்றி தேராது அகத் தியனுர், தொல்காப்பியனுர், திருவள்ளுவ நாயனுர் தமிழான் வீடு கூருரென்னும் பொருள் படத் தொல்காப்பியவுரையில் தமக்கு வேண்டியவாறெல்லாமுரைத்தார்."

என்றுரைத்ததும் கருதுக. ஆயின் திருக்குறள் வீடுணர்த்தும் நூலென்று நச்சினுர்க்கினியர் உடம்பட்டிலரேயெனின், அவர் திருக்குறளைச் சுட்டி மட்டும் இதனைக் கூருது தமிழ் மொழியையே சுட்டிக் கூறினர் வீடு பேற்றியல் நுதலும் உரிமை வட மொழிக்கே யுண்டென்னு மவரது பிழை பட்ட கருத்தானெழுந்த கூற்ருகலி னிதனைக் கொள்ளாமென்க. அன்றியும் வீடு பேற்றி யல் நுதலுந் திருமந்திர முதலிய அருணூல்கள் உளதாதலையு முணராதுரைத்தாரென்றும் விடுக்க, அன்றியும் "நச்சினுர்க் கினியர் முதலியோர் போல யாம்பிடித்ததே சாதிப்பே மென் னுஞ் செருக்கால் யாண்டும் மயங்காமையின்" எனத் தொல் காப்பியச் சூத்திர விருத்திக்கண்வரும், மாதவச் சிவஞான யோகிகளின் உரையே இவர்தம் குண நலன்களையுங் காட்டு மென்க.

மேற்கூறியவாற்ருன் வட நூல்களோப்ப வள்ளுவனுரும் வீட்டைப் பிரித்துரையாமையான் வருவதோரிழுக்கின்றென்க.

௬. அறம் பொருளின்பமே வீடா?

இங்ஙனமாகவும், இற்றைநாட்புலவன் மாருட் சிலர் திருக் குறள் வீடுங் கூறிற்றெனலைப் புறம்போக்கி, அறம் பொருளின் பெனு மூன்றினும் வீடு விரவி நிற்ப தென்றொரு விளக்கந் தந்தமைவர். 'திருக்குறள் விரிவுரை' என்னும் நூலாசிரியர் இக்கருத்தைப் பின் வருமாறு வலியுறுத்துவர்.

"அறவழி நின்று பொருளாக்கி இன்பம் நுகர்வார் வீடு அடைதல் ஒரு தலை அறம் பொருளின்ப வாழ்வின் பயன் வீடு. அடைவாகவும் பயனுகவுமுள்ள ஒன்றை எப்படிச் சொல்லால் அறுதியிட்டுச் சொல்வது? வீடு, அறம்பொருள் இன்பங்களினின்றும் வேறுபட்டு நிற்பதன்று அது மூன்றினும் விராவி நிற்பது. திருக்குறளிலுள்ள ஒவ்வொரு பாலிலும் வீடு விராவி நிற்கிறது.

"இம் மூன்றில் கலவாத வீடு ஒன்று தனித்திருப்பதாக அவ்வறிஞர்க்குத் தோன்றவில்லை. அறம் பொருள் இன்ப வாழ்வில் வீடு பொலிதல் அவர்க்கு நனி விளங்கிற்று.

"நாளடைவில் வீட்டைப் பற்றிய தனி நூல்கள் பெருகின. இவைகளுள் மிகச் சிலவே பழங்கொள்கைக்குத் துணை போவன. பல அறம் பொருள் இன்பவாழ்வில் பொருளற்ற நிலைமையையும் — இயற்கையை வெறுத்தல் — பெண்ணை வெறுத்தல் என்னும் போலித்துறவையும் நுழைத்து நல்வாழ்வுக்கு இடர் செய்தன.

"தனித்த வீடென்று அறம் பொருளின்ப வாழ்வை வெறுக்க ஏவும் நூல்களை இயற்றுவது பாவம். அறம் பொருள் இன்ப வாழ்வின் பயன் வீடாயிருத்தலான் வீட்டைத் தனியே பிரித்துக் கூறுவது எற்றுக்கு?

(வள்ளுவர் வாய்மொழி என்ற நூல். 53, 54, 55 ஆம் பக்கங்கள்) அவல வயிற்றை வளர்ப்பதற்கே அல்லும் பகலும் அதில் நினைவாய்க் கவலைப்படுவதன்றி, சிவகனியைச் சேரக் கருதுகிலா இந்நாள் வாழ்வு நடைக்கேற்ப நடையிடுவது இக் கருத்தாதலின் புலவர் பலரும் இதனை விரைந்தேற்றுக்கொண்டு வியந்தேத்திப் பின்பற்றுவாராயினர். இக்கருத்தின் வன்மையையும் ஆய்ந்து காண்டல் நம்மனோர் தம் கடனுமென்றுணர்க. (அ) "வீடு, அறம் பொருளின்பங்களினின்றும் வேறுபட்டு நிற்பதன்று; அது மூன்றிலும் விராவி நிற்பது" என்பது திருவள்ளுவர் திருவுள்ளமேல்.

"அடல்வேண்டு மைந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய வெல்லா மொருங்கு"

என்று அப்பெருமான் சொற்றது முரண்பட்டுச் சோர்வுபடுவதாமென்க அற்றன்று. இனிப்பை யுண்பாற்குத் தெவிட்டலுண்டாமெனலறிதி யன்றே! அங்ஙனமே, அறம் பொருளின்ப நுகர்ச்சிக் கண் தங்கினாற்குந் துவர்ப்பு நிகழும். அதனையே "அடல் வேண்டு மைந்தன் புலத்தை" என்றது என்பாரொரு சாரார். அங்ஙனமாயின் துவர்ப்பு நிகழும் ஞான்றே வீடுபேற்றின்பமும் அவன் இழந்தானாகல் வேண்டும். என்னை? அஃது அறம் பொருளின்பம் மூன்றினும் விராவி நிற்பதொன்றாகலானென்க

அன்றியும் உடல் முதிர்ச்சியான் பொறிகள் வன்மையிழந்து கிடத்தல் துவர்ப்பாகாது. இவனுள்ளம் முதிர்ச்சியுறாமையால்

மூவாசைகளில் மூழ்கியே கிடக்கும். இஃதே உலகில் யாண்டுங் காட்சி தருவது, உடலுரங் குன்றினன் உள்ளத்துர முங்குன் றினனேயாம். இவன் கூர்மை கழிந்த கத்தியொப்பான். அக் கத்தி தீட்டப்பட்டு மீட்டுங் கூர்மைபெறின் எப்பொருளையும் வெட்டுவதில் சிறக்குமாறு இவனும் உடல் வன்மை மீட்டுறின் பண்டுபோல் நுகர்வின்கண் பெரிதும் ஆழ்வனென்க.

ஆகலின் நுகர்ச்சியினுழ்ந்தே ஐம்புலத்தை யடல்வேண்டு மெனலும் நுகர்ச்சியை முனிவாரால் ஐம்புலத்தை யடுதலியலா தெனலும், கள்ளுண்டு களிப்பாரே கள்ளுண்டலில் துவர்ப்புற் றுப் பெருஞானமெய்தற்கியலும்; கள்ளைக்கடிவாராலியலாதென லும்போலாம். (ஆ) திருக்குறளிலுள்ள ஒவ்வொரு பாலிலும் வீடு விராவி நிற்பது வாய்மையேல். அறத்துப்பாலில் ஏனை யிருபால்களின் இன்றியமையாமையை யுணர்த்தல் ஆசிரியர் தங்கடனும். அக்கடனை யாற்ருமையோ டமையாது,

"அருட்செல்வஞ் செல்வத்துட் செல்வம் பொருட்செல்வம்
பூரியார் கண்ணு முள"

என்று பொருட் செல்வத்தை இழித்துரைத்தும்.

"காமம் வெகுளி மயக்க மிவைமூன்ற
னுமங் கெடக்கெடு நோய்"

என்றுரைத்து (ப்பொருட்பாலுக்குங் காமத்துப் பாலுக்கும் ஏதுவாய் நிகழும்) காமத்தை (அவாவையும்) இன்னணம் பழித்தும் பாவியற்றல் தெய்வப் புலவர்க்குத் தகுதியாமோ? அன்றியும், "புறத்தாற்றிற்போஒய்ப் பெறுவதெவன்" எனத் தாமே புகழ்ந்தெடுத்த இல்வாழ்க்கையையே எள்ளி நகையாடு வார் போன்று

"துறந்தார்க்குத் துப்புரவு வேண்டி மறந்தார்கொல்
மற்றை யவர்க டவம்"

என்றிசைத்தலும் ஏலாததே. ஆகலின் திருக்குறளிலுள்ள ஒவ்வொரு பாலிலும் வீடு விராவி நிற்பதென்ற கருத்து திரு வள்ளுவரே யுணராத தொன்றென்று விடுக்க.

(114ம் பக்கம் பார்க்க)

(சென்ற இதழின் தொடர்ச்சி)

நாட்டுப் பாடல்

பேராசிரியர் **வ. பெருமாள்,**
எம். ஏ. பி. டி., எம். ஆர். ஏ. எசு.,
தமிழ்ப் பேராசிரியர், முதல் நிலைக் கல்லூரி
உரிகம். கோலார் தங்கவயல்.

பூவையர்க்குப் பூவின் மேல் எப்போதும் காதல் உண்டு. தோட்டத்தில் பூப்பறிக்கும் பெண்கள் அகமகிழ்ச்சியுடன் பாடிக் கொண்டே பறிக்கின்றார்கள். பூவையரின் பூப்பாட்டை நாமும் கேட்போம்.

எட்டிப்பறி பூவை விட்டுவிடு அரும்பை
தாவிப்பறி பூவை தள்ளிவிடு அரும்பை
ஓடிப்பறி பூவை ஒதுக்கிவிடு அரும்பை
தள்ளிவிட்ட அரும்பு தானாய் மலராதோ
ஒதுக்கிவிட்ட அரும்பு உடனே மலராதோ
பூவைப்பறிப்பேனே பிள்ளையார்க்குச் சாத்த
காயைப் பறிப்பேனே கர்த்தருக்குச் சாத்த
மொக்கைப் பறிப்பேனே விக்கனருக்குச் சாத்த

நூல் நூற்கும் பருத்திப் பெண்டிர்
ராட்டை என்றால் ராட்டை தான்
குன்னத்தூரு ராட்டை தான்

என்று ராட்டைப் பாட்டைப் பாடிக் கொண்டே நூல் நூற்பது இயல்பு.

'குபேரன் பட்டணத்திலும் விறகுத் தலையன் உண்டு' என்பது பழமொழி. காட்டிற்குச் சென்று, விறகை வெட்டித் தலையில் அதைச் சுமந்து கொண்டுவந்து, விற்று வயிற்றுப் பிழைப்பு நடத்துகின்ற பெண் ஒருத்தியின் துன்ப வாழ்க்கையைச் சொல்லோவியமாகக் காட்டுகிறது ஒரு நாட்டுப் பாடல். இதோ அச் சொல்லோவியம்.

வேகாத வெயிலுக்குள்ளே — ஏதில்லலோ லேலோ
விறகொடிக்கப் போற பெண்ணே — ஏதில்லலோ லேலோ
கஷ்டப்பாடு பட்டுபட்டு — எதில்லலோ ஏலோ
கழுத்தொடியச் சுமக்கும் பெண்ணெ—ஏதில்லலோ ஏலோ
எங்கேபோய் விறகொடித்து — ஏதில்லலோ ஏலோ
என்ன செய்யப் போருப் பெண்ணே — ஏதில்லலோ ஏலோ
காட்டுக்குள்ளே விறகொடுத்து — ஏதில்லலோ சாமி
வீட்டுக் கதைச் சுமந்து வந்து — ஏதில்லலோ சாமி
கால் ரூபாய்க்கு விறகு வித்து — ஏதில்லலோ சாமி
கஞ்சி கண்டு குடிக்கனுமே — ஏதில்லலோ சாமி

ஆங்கிலேயர் ஆட்சியில் நம் நாட்டில் இருப்புப் பாதைகள் போடப் பெற்றன. இருப்புப் பாதைகள் போட்ட தொழிலாளிகள் பாடிய பாட்டு நம் காதில் விழத்தான் செய்கின்றன. அவர்கள் பாடிய பாட்டுக்கள் பல. இதோ அவற்றுள் ஒன்று

(112ம் பக்கம் தொடர்ச்சி)

(இ) "இம்மூன்றிற் கலவாத வீடு ஒன்று தனித்திருப்பதாக அவ்வறிஞர்க்குத் தோன்றவில்லை. அறம் பொருள் இன்ப வாழ்வில் வீடு பொலிதல் அவர்க்கு நனி விளங்கிற்று" இக்கூற்று குறிக்கும் அறிஞராவார் யாவரோ என்பது தெளிவாகவில்லை. திருவள்ளுவரையும் இவ்வறிஞரோடு சேர்த்தெண்ணுதற்குத் திருக்குறளே தடையாயுளது. வீடு என்பது தனித்தில்லையேல் தனித் தனிக் கடவுளரும் தேவரும் அவர்வதியும் உலகங்களுமுண்டென்பதனுற்போந்தபயனென்னைகொல்? "நல் விருந்துவானத்தவர்க்கு" என்பதனுல் வானவரும் அவருறையுமிடமும், "அண்ணுத்தல் செய்யாதளறு" என்பதனுல் துன்புய்க்கும் நிரயமும். "வானேர்க்குயர்ந்தவுலகம்" என்பதனுல் தேவரும் அண்ணவெண்ணுததும் இன்பத்துறையுளுமாய உலகமும். "தாமரைக் கண்ணனுலகு" என்பதனுல் திருமாலுலகமும் உண்டென்பது திருவள்ளுவர் உள்ளக்கிடக்கையாதல் தெளிக. இவ்வுலக வாழ்வில் எய்தும் அறம் பொருளின் பங்களில் விராவியது வீடெனில் இத்தனை உலகங்களிருத்தலும் அதனை யெடுத்துரைத்தலும் பயனின்றியே கழிந்தனவாம் சிலப்பதிகாரமும், துறவியாகிய இளங்கோவடிகளையே "அந்தமிலின்பத்தரசாள்வேந்" தெனவியந்ததேயன்றி அறவழி நின்று பொருளாக்கி இன்பம் நுகர்ந்த செங்குட்டுவனை அவ்வண்ணம் சிறப்பித்திலது என்பது மோர்க.

(தொடரும்)

ஒரு தட்டு ஏலேலோ — மண்ணெடுத்து ஐலசா
நான் போட்ட ஏலேலோ — ரயிலுரோடு ஐலசா
நான் போட்ட ஏலேலோ — ரோட்டுக்குள்ளே ஐலசா
நம்மதுரை ஏலேலோ — வருவாரிப்போ ஐலசா
நம்மதுரை ஏலேலோ — வந்தவுடன் ஐலசா
நமக்குப்பணம் ஏலேலோ — தருவாறிப்போ ஐலசா
கொடுக்கிறது ஏலேலோ — ராணிதுட்டு ஐலசா
எடுக்கிறது ஏலேலோ — மணிப்பிரம்பு ஐலசா

பண்டைத் தமிழகத்தில் பந்தாட்டம் மகளிர்க்குரிய சிறப்பு விளையாட்டாக இருந்தது. மகளிர் பந்தாடுகின்ற போது பந்தாட்டத்துடன் ஓசைக் கேற்பப் பாடிக்கொண்டே ஆடுவது மரபு. அப்பாட்டு கந்துகவரி எனப்படும். (கந்துகம் — பந்து, வரி — பாட்டு) குடிமக்கள் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோ அடிகள் மகளிர் பந்தாட்டத்தைக் குறிப்பிடுகின்றார். மங்கையர் தாம் அணிந்திருந்த பொன்மாலை ஒளி வீச, மேகலைகள் ஒலிக்க, பேருவகையுடன் அகங்குளிரப் பாண்டியனை வாழ்த்திக் கொண்டே பந்தாடுகின்றார்கள்.

பொன்னிலங்கு பூங்கொடி பொலஞ்செய் கோதை வில்லிட
மின்னிலங்கு மேக லைகள் ஆர்ப்ப ஆர்ப்ப எங்கணும்
தென்னன் வாழ்க வாழ்க என்று சென்றுபந்தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க என்று பந்தடித்துமே
பின்னுமுன்னும் எங்கணும் பெயர்ந்துவந் தெழுந்துலாய்
மின்னுமின் னிளங்கொடி வியனிலத் திழிந்தெனத்
தென்னன் வாழ்க வாழ்க என்று சென்று பந்தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க என்று பந்தடித்துமே
துன்னிவந்து கைத்தலத் திருந்ததில்லை நீணிலம்
தன்னினின்று மந்தரத் தெழுந்ததில்லை தானெனத்
தென்னன் வாழ்க வாழ்கவென்று சென்று பந்தடித்துமே
தேவரார மார்பன் வாழ்க என்றுபந் தடித்துமே
(சிலப்பதிகாரம் 29 வாழ்த்துக் காதை)

இப்பாடல்களின் இசை பந்தாட்ட ஓசைக்கு ஏற்ப அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. இங்குள்ள ஒலிக்குறிப்பு (onomatopoeia) கேட்கும் தொறும் இன்பம் பயக்க வல்லது.

மகளிர் பாடிக் கொண்டு பந்தாடுவதைப் போலவே அம்மானை ஆடும்போதும் ஊஞ்சலில் அமர்ந்து கொண்டு ஆடும்

போதும் பாடல் பாடுவது மரபு. அம்மானைப் பாட்டு அம்மானை வரி எனப்படும். கழங்கு ஆடும்போது மகளிர் அம்மானை பாடுவதை நாம் இன்றும் காணலாம்.

ஊஞ்சல் ஆடும்போது பாடுகின்ற பாடல் ஊசல் வரி எனப்படும். (ஊசல்—ஊஞ்சல்) ஊசல்வரி சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றிருப்பது போல நந்திக் கலம்பகத்திலும் இடம் பெற்றிருக்கிறது. இறைவனை ஊஞ்சலில் வைத்து ஆட்டுவதும் மணமக்களை ஊஞ்சலில் அமரச் செய்து ஆட்டுவதும் நம் நாட்டு மரபு. மகளிர் பொழுது போக்குக்காக ஊஞ்சலில் அமர்ந்து ஆடுவதை நாம் இன்றும் காணலாம். இதோ ஓர் ஊஞ்சல் வரி (ஊஞ்சல் பாட்டு)

ஓடரிக்கண் மடநல்லீர் ஆடாமோ ஊசல்
உத்தரியப் பட்டாட ஆடாமோ ஊசல்
ஆடகப்பூண் மின்னாட ஆடாமோ ஊசல்
அம்மென்மலர்க் குழல்சரிய ஆடாமோ ஊசல்
கூடலர்க்குத் தெள்ளாற்றில் விண்ணருளச் செய்த
கோமுற்றப் படைநந்தி குவலயமார்த் தாண்டன்
காடவற்கு முன்தோன்றல் கைவேலைப் பாடி
காஞ்சிபுரமும் பாடி ஆடாமோ ஊசல்

— நந்திக் கலம்பகம் — 33

இவற்றைத் தவிரச் சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள கடற்கரையில் பாடப்படும் கானல் வரி, வேட்டுவர்களின் நடனத்துடன் பாடப்படும் வேட்டுவ வரி, ஆயர்களின் கூத்துப் பாட்டாகிய ஆய்ச்சியர் குரவை, மலைவாழ் மக்களின் பாடலாகிய குன்றக் குரவை, உழவர்கள் பாடுகின்ற மருதப் பறைப் பாட்டாகிய கிணைப் பாட்டு ஆகிய யாவும் மக்கள் இலக்கியமே.

இடைக்குல மகளிர் குரவைப் பாட்டைப் பாடும்போது குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், என்னும் ஏழிசைக்கு ஏற்ப நின்று பாடியதைச் சிலப்பதிகார ஆய்ச்சியர் குரவை வாயிலாக அறியலாம்.

சிலப்பதிகாரத்தில் இடம் பெற்றுள்ள நாட்டுப் பாடல்களில் கானல் வரி, ஆற்று வரி, சார்த்து வரி, முகமில் வரி, நில வரி, மாரி வரி, திணை நிலை வரி, மயங்கு திணை வரி, சாயல் வரி, வேட்டுவ வரி, கார் சூழ் வரி, அம்மானை வரி, கந்துக வரி,

ஊசல் வரி, முதலிய வரிப் பாடல்கள் மிகுதியாக அமைந்துள் ளன என்பது குறிப்பிடத் தக்கது. வரிப் பாடல்களின் கருப் பொருளையும் சொற்களையும் ஆராய்ந்தால் அவையாவும் நாட்டுப் பாடல்கள் என்பதைத் தெளிவாக அறியலாம். சிலப்பதிகார மங்கல வாழ்த்திலும், வாழ்த்துக் காதையிலும் வாய்மொழி இலக் கியக் கூறு மிகுதியாகயிருப்பதைக் காணலாம்.

மாணிக்கவாசகர் திருவாசகத்தில் குறிப்பிட்டுள்ள திரு அம்மானை, திருப் பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திருச் சாழல், திரு உந்தியார், திருத் தோணோக்கம், திருப்பொன்னூ சல் முதலிய யாவும் மக்கள் இலக்கியத்தைச் சேர்ந்தவை. பழங் காலத்தில் பொது மக்களால் பாடப்பட்டு வாழையடி வாழை யாக வாய்மொழியாக வந்த இப்பாடல்களைச் சில மாற்றமும் திருத்தமும் செய்து தம்முடைய இலக்கியங்களில் சேர்த்துக் கொண்டனர், புலவர்கள். இளங்கோவடிகள், மாணிக்க வாசகர். பெரியாழ்வார் போன்ற பெரும் புலவர்கள் இயற்றிய நூல்களில் நாட்டுப் புற விளையாட்டுப் பாடல்கள் மிகுதியாக இடம் பெற் றிருக்கின்றன. சிறு பெண்கள் வட்டமாகக் கூடிக் கை கொட்டிப் பாடிக்கொண்டே ஆடுகின்ற ஆட்டம் கும்மி அல்லது கும்மிப் பாட்டு எனப்படும். கைகளுக்கு மாறாகக் கோல்களைப் பயன் படுத்தி ஆடிப் பாடும் போது கோலாட்டப் பாட்டு என்னும் பெயர் பெறுகின்றது- கும்மிப் பாட்டு கோலாட்டப் பாட்டை விடத் தொன்மையானது. கும்மிப் பாட்டைப் போன்ற மற்றொரு ஆட் டப் பாடல் ஒயிற் கும்மி யாகும். 'வள்ளி வள்ளி வனந்தனிலே' என்பது புகழ் வாய்ந்த ஒயில் கும்மி சிறு பெண்கள் சப்பளம், கல்லாட்டம், தட்டாட்டம் முதலிய ஆட்டங்கள் ஆடும்போது பாடுவதை நாம் இன்றும் கிராமப் புறங்களில் காணலாம்.

மகளிர் ஆடிக்கொண்டே பாடுவதைப் போல ஆடவரும் சடுகுடு விளையாட்டு ஆடும்போது பாடுவது மரபு. சடுகுடு தமிழகத்தில் தோன்றிய தொன்மையான ஆடவர் விளையாட் டாகும் சடுகுடு விளையாடும் இளைஞர்கள் தம் வீரத்தையும் ஆண்மையையும் புலப்படுத்தும் வகையில் கிளர்ச்சியோடும் எழுச்சியோடும் ஒரே மூச்சில் பாடிக்கொண்டே ஆடுவார்கள். இதோ ஒரு சடுகுடுப் பாட்டு,

சடுகுடு பாடுவேன் சாரக்கத்தி வீசுவேன்
என்தரத்துப் பிள்ளைகளைத் தூக்கி தூக்கி வீசுவேன்
எரிக்கலம் பழுப்பே உனக்கென்ன மூப்பே
ஏறிமிதிச்சா தெரிச்சில்ல கோவே

சடுகுடு மலையிலே ரெண்டானை
தவறி விழுந்தது கிழட்டானை
தூக்கி விட்டது நான் தானே
கீத்துக் கித்தடா கீரைத் தண்டுடா
நட்டுவச்சண்டா, பட்டுப் போச்சடா
ஈக்கி ஈக்கி சோளத்தட்டை
இந்திர வாழைச் சோளத்தட்டை
பணத்துக்கு ரெண்டுகட்டு
அப்பா சுடலை முத்து எப்ப கலியாணம்
காடு விளைய விட்டு கண்டாங்கி நெய்ய விட்டு
சிறுக்கி சமயவிட்டு சித்திரை மாதம் கலியாணம்.

ஓடம் விடும் போது துடுப்பின் அசைவிற்கும் தண்ணீரின் ஓசைக்கும் ஏற்பப் பாடப் படுகின்ற பாட்டு ஓடப் பாட்டு எனப் படும். இது ஏலப்பாட்டு, ஏலேலப் பாட்டு, கப்பற் பாட்டு அம்பாப் பாட்டு முதலிய பெயர்களாலும் குறிக்கப்படுவதுண்டு. ஏலேல சிங்கன் திருவள்ளுவர் மாணவன் என்றும், அவன் சிறந்த கடல் வணிகன் என்றும் செவிவழிச் செய்தியாக ஒரு கதை வழங்கி வருகின்றது. 'ஏலேல சிங்கன் பொருள் ஏழு கடலிற் போனாலும் திரும்பும்' என்பது பழமொழி. ஏலேல சிங்கன் பெயருடன் தொடர்பு படுத்திப் பாடுகின்ற ஓடப் பாட்டு ஏலப்பாட்டு என்றும் ஏலேலப் பாட்டு என்றும் பெயர் பெற்றது.

கடலின் மேலே — ஏலேலோ
காற்றடிக்குது ஐலேசா
கட்டுமரம் பூப்போல — காதம்
கடக்கோணும் ஐலேசா

இவ்வகைப் பாட்டில் ஏலேல ஐலசா என்னும் தொடர் பன்முறை பயின்று வரும் கடலில் மரக்கலம் (கப்பல்) செலுத்தும் போதும் இப்பாடல் பாடப்படுவதால் இதற்குக் கப்பல் பாட்டு என்னும் பெயரும் தோன்றிற்று. இதை மலையாளத்தில் வஞ்சிப் பாட்டு என்று குறிப்பிடுவர்,

மண்ணை நம்பி மரமிருக்கு — ஏலேலோ ஐலசா
மரத்தை நம்பி கிளையிருக்கு — ஏலேலோ ஐலசா
கிளையை நம்பி இலையிருக்கு — ஏலேலோ ஐலசா
இலையை நம்பி பூவிருக்கு — ஏலேலோ ஐலசா
பூவை நம்பி காயிருக்கு — ஏலேலோ ஐலசா
காயை நம்பி கனியிருக்கு — ஏலேலோ ஐலசா
கனியை நம்பி நீயிருக்கே — ஏலேலோ ஐலசா
உன்னை நம்பி நான் இருக்கேன் — ஏலேலோ ஐலசா

என்னும் பாடல் பொதுமக்கள் நன்கறிந்த ஓடப்பாட்டாகும். கடற்கரையில் ஏக்கத்துடன் நின்று கொண்டிருக்கும் தன் ஆசைக் கண்ணாட்டியைப் பார்த்துப் பாடுவதாகவுள்ள இப் பாட்டில் காதற் சுவை அமைந்திருப்பதைக் காணலாம். தோணி இயக்குதலாகிய மிகக் கடுந் தொழில் புரியும்போது தான் ஏலப் பாட்டு பாடுவது மரபே தவிர மிக எளிய வேலை செய்யும்போது ஏலப் பாட்டோ வேறு எந்தப் பாட்டோ பாடுவது மரபன்று. இவ்வுண்மையைக் 'கீரைத் தண்டு பிடுங்க ஏலப் பாட்டு வேண்டுமா?' என்னும் பழமொழி தெளிவு படுத்தி உறுதிப்படுத்துகின்றது.

இரவு முழுவதும் வண்டி ஓட்டிச் செல்பவன் தன் சோர்வு தெரியாமல் இருக்கும் பொருட்டுத் தெம்மாங்கு பாடிக்கொண்டே மாட்டு வண்டியை ஓட்டிச் செல்வான். அவன் இசைக்கும் பாட்டில் தன் மனைவிக்கு வாங்கி அணிவிக்கவிருக்கும் பல்வேறு அணிகலங்களையும் காணலாம்.

உப்பு புடிச்சு வண்டி — லேலங்கிடி லேலோ
உடுமலைபேட்டை போற வண்டி — லேலங்கிடி லேலோ
உப்பு விலையா தட்டடி — லேலங்கிடி லேலோ
கொப்புசரம் பண்ணித்தரேன் — லேலங்கிடி லேலோ
பாக்கு புடிச்ச வண்டி — லேலங்கிடி லேலோ
பாலக்காடு போற வண்டி — லேலங்கிடி லேலோ
பாக்கு விலை யாகட்டடி — லேலங்கிடி லேலோ
பாதரசம் பண்ணித்தரேன் — லேலங்கிடி லேலோ
கொள்ளு புடிச்ச வண்டி — லேலங்கிடி லேலோ
கோயமுத்தூர் போறவண்டி — லேலங்கிடி லேலோ
கொள்ளுவிலை யாகட்டடி — லேலங்கிடி லேலோ
குவலைசரம் பண்ணித்தரேன் — லேலங்கிடி லேலோ
நெல்லு புடிச்ச வண்டி — லேலங்கிடி லேலோ
நீலகிரி போற வண்டி — லேலங்கிடி லேலோ
நெல்லு விலையாகட்டடி — லேலங்கிடி லேலோ
நெல்லிசரம் பண்ணித்தரேன் — லேலங்கிடி லேலோ

வண்டிக்காரன் தன் மனைவிக்குக் கொப்புசரம், பாதசரம், குவலைசரம், நெல்லிசரம் முதலிய சரங்கள் வாங்கி அணிவிக்க ஆசைப் படுவதை இப்பாட்டு தெளிவு படுத்துகின்றது.

— தொடரும்.

(சென்ற இதழின் தொடர்ச்சி.)

நாடகக் கலை முன்னோடி

டாக்டர். சாலை இளந்திரையன்
தில்லிப் பல்கலைக்கழகம்.

உரையாடல் சிறப்பு.

பேசுகின்ற பாத்திரம். பேசப்படும் சூழ்நிலை, ஏற்படுத்தும் விளைவு என்பவற்றிலும் இந்த நாடகத்தின் வசனம் (உரையாடல்) மிகச்சிறப்பாக அமைகிறது. எப்படியோ பொருளைத் தேடி நாமும் நமக்கு வேண்டியவர்களும் சுகமாக இருப்பதே இலட்சிய வாழ்வு என்று வாதிடும் லவுகீகரை, "ஆ ஆ ஆ" என்ன திவ்வியமான கொள்கை! என்ன சுகிர்தமான எண்ணம்! எவ்வளவு மதிக்கத்தக்க உணர்ச்சி!" என்று ஏளனம் பண்ணுகிறான் பிரதாபசந்திரன் உடனே லவுக்கர்,. தமது நோக்கும் போக்கும் அப்பட்டமாகத்தொனிக்கின்ற வகையில், பின்வருமாறு பேசுகிறார்;

"அட என்ன சார், நீங்க சொல்லுகிறது வீண்வம்பாயிருக்கிறது. கிணற்றுத் தவளைக்கு நாட்டு வளப்பம் ஏன்? நம்முடைய காரியம் என்னவோ அதைவிட நமக்கு நாட்டில் நடப்பதைப் பற்றி விசாரிக்க வேண்டியவை என்ன?... ... இந்தத் தேசாபிமானமென்னப்பட்ட பைத்தியத்தால் நமக்கு விளையும் பயனென்ன, சொல்லுங்கள் அதனால் வயிற்றுக்குச் சோறு, கட்டத் துணியா? விருதாவாய்ப் பலபேர் வாயிலகப்பட்டு அவதூறு படுவதேன்? நம்முடைய நாட்டை எவன் கண்டான்? நாம் எப்படியாகிலும் பத்துப் பேருக்கு நல்லவனென்று பெயரெடுத்து நாலு பெரிய மனுசியாள் நம்முடைய வீட்டிற்கு வரவும் போகவும் இருந்தால் போதும்.[16]

இந்தப்பேச்சு லவுகீகரின் இயல்பை விளக்குவதோடு, இதிலே பொங்கித் ததும்பும் நாடகப் பண்பையும் கவனிக்க வேண்டும் கதையின் நாயகனாகிய நல்லவன் இந்தப் போக்கை ஏலவே ஏளனஞ் செய்திருப்பதால். - லவுகீகர் பேசப் பேசக்கேட்பவர்களுக்கு, அவர்மீது அருவருப்பே உண்டாகிறது; அவரைப்

---

16. பிரதாபசந்திர விலாசம்: அங்கம் 1; களம் 1

போல் நாட்டிலே வாழ்ந்துவரும் பல "நமக்கென்ன" ஆசாமிகளின் நினைவும் வருகிறது

தன்னுடைய கெட்ட நடத்தையால் "குலம்தரு வான்பொருட் குன்றம் தொலைத்த" விசுவாசகாதகன், தனது வைப்பாட்டியான சோக்சுந்தரத்தைக் கொண்டு பிரதாப சந்திரனை வசப் படுத்திப் பொருள்பறிக்கத் திட்டமிடுகிறான். அதைக்கேட்டதும் அவன் கூட்டத்தைச் சேர்ந்த அப்பாவியான பாவாடைசித்தர் அங்கலாய்க்கிறார்.

"அடா அப்பா! அப்பனே அது தீண்டாவிளக்கு; அந்த வசுது பெரிய சமீன்தாருடைய பிள்ளை; படிப்பிலே பாரதி. ஆனால் மெத்தச் சிறுபிள்ளை" [17]

இந்தச் சில வாக்கியங்களிலேயே, ஆசிரியர். தீயரை நாடி இருந்து பிழைக்கும் பாவாடைசித்தருக்குள் இருக்கும் நல்ல மனத்தையும் பிரதாப சந்திரனின் இயல்புகளையும் இரத்தினச் சுருக்கமாக அவைக்கு விளக்கிவிடுகிறார். எதிரியின் பக்கத்திலேயே மதிப்பையும் அனுதாபத்தையும் பெறக்கூடிய பிரதாபனின் குணச்சிறப்பு இதிலேதெளிவாகத் தொனிக்கிறது; கூடவே நல்லவனாகிய அவன், (மெத்தச் சிறுபிள்ளையாகையால்) விசுவாச காதகனின் வலையில்வீழ்ந்துவிடப் போகிறான் என்னும் குறிப்பும் இங்கேயே புலப்பட்டு, நாடகத்துக்கு விறுவிறுப்பை ஊட்டுகிறது.

விசுவாசகாதகனின் வலையில் விழுந்து சோக்சுந்தரத்தின் மையலில் சிக்கிவிட்டான் பிரதாபசந்திரன். பலவாறு இடித்துரைத்த நண்பர்களையும் மதியாமல். அவனுடைய

இடங்கழி நெஞ்சத்து இளமை யானை,
கல்விப் பாகன் கையகப் படா அது,
ஒல்கா உள்ளத்து ஓடு; [18] கின்றது

இந்தச் சூழ்நிலையில், விசுவாசகாதகன் மேல் வெறுப்புற்று அவனைப் பிரிந்த இடிமுழுங்கி பிரதாபனுக்கு அறிவுகொளுத்த முனைகிறான்.

"என்ன சார், உங்களுக்குப் பத்தொன்பது வயது; அந்த பீஸ்டு (Beast) க்குக் கிட்டக்கிட்டப் பாதி வயது ஆகிவிட்டது, அவளோ இதுவரையில் அநேக வாலிபரைக் கெடுத்துக் கொடி போட்ட நீலி. கடைசியில்வந்தவன் விசுவாசகாதகன். அந்த படவாவுக்குத் தகுந்தபேரே கிடைத்தது." [19]

---

17 பிரதாபசந்திர விலாசம்; அங்கம் 2; களம் 2
18. சிலப்பதிகாரம்; கட்டுரை காதை, 37—39
19. பிரதாபசந்திர விலாசம்; அங்கம். 8; களம் 2.

முதல் வாக்கியத்திலேயே இடிமுழுங்கிக்குப் பிரதாபனிடம் உள்ள மதிப்பும், அவனிடம் எழுந்துள்ள அனுதாபம் கலந்த அக்கறையும் அப்பட்டமாகப் புலப்படுகிறது பிரதாபனின் நண்பர் பலரும், சோக்சுந்தரத்தைப்பற்றியும் விசுவாசகாதகனைப் பற்றியும் ஏற்கனவே பலபடப் பேசியுள்ளார்கள். ஆகையால் அத்தனையும் தொகுத்து முத்திரையிட்டது போல, அவனுடைய வயது, செயல் முதலியவைகளையும், —(நம்பினவரை மோசஞ் செய்யும்) விசுவாச காதகனின் இயல்பை அவனுடைய பெயரே வெளிப்படுத்துவதையும் மட்டும் இவன் சுட்டிக்காட்டுகிறான் இந்தப்பொருத்தமான பேச்சே நாம் எதிர்பார்ப்பது போல, பிரதாபசந்திரனின் மயக்கத்தை முதல்முதலில், தெளிவிக்கிறது

4

அடிப்படைக் கருத்து. குணச்சித்திரம், நடிப்பு என்னும் மூன்று பண்புகளாலுமே ஒரு நாடகம் சிறப்படைகிறது.

கருத்தும் நடிப்பும்

அறிவாளிகளும் படிபாளிகளுமே நாட்டை நல்லவழியில் நடத்தவேண்டியவர்கள். அவர்களே தட்டுகெட்டுத் தடுமாறினால் சமுதாயம் கெட்டுப்போவதற்குத் தடையே இராது. "பேய் அரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள்!" என்பது போல. படித்தவர்கள் கெட்டவர்களாகிவிட்டால் அவர்களே மற்றெல்லாரையும் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விடுவார்கள். தமிழ் (இந்திய) ச் சமுதாயம் ஒரு புதிய மலர்ச்சிக்குப் படித்தவர்களை நம்பியிருந்த ஒரு காலக்கட்டத்தில் (19-ம் நூற்றாண்டில்) தோன்றிய நாடகம் இது. எனவே, வேசியரொழுக்கத்தின் கேடுகளை விவரிப்பதோடு, பலப்பல இயல்புகளுடைய படிப்பாளிகளை அறிமுகம் செய்து, அவர்களுள் '(நிபுணர்போன்ற) செயல் வீரர்களே மிகுதியாக வேண்டும்' என்று வலியுறுத்துகிறது நாடகம்.

குண இயல்பில் உள்ள முரண்பாடுகளை அடிப்டையாகக் கொண்ட நாடகமாகையால், இதிலே நடிப்புக்குப் போதிய வாய்ப்பு இருக்கிறது: பிரதாபசந்திரனை வசப்படுத்துவதற்காகத் தன் உண்மையான இயல்பையே மறைத்து நடிக்கிறான் விசுவாச காதகன். ஒரு காட்சியில், தன் நண்பர்களோடு தனது உண்மையான இயல்புகளோடு தோன்றும் விசுவாசகாதகன் அடுத்த காட்சியிலேயே நல்லவனாக நடிக்க வேண்டியவனாகிறான் அதேபோல். விசுவாசகாதகனிடமே பற்றுக்கொண்டுள்ள சோக்

சுந்தரம், மத்தாப்பு சுந்தரம் ஆகிய பெண்களும் இப்படியே இரண்டு நிலைகளில் மாறிமாறித் தோன்ற வேண்டியவர்களாகிருர்கள்.

இவர்களின் நடிப்பாலேயே பிரதாபசந்திரனின் குண இயல்பில் பெரிய சலனம ஏற்படுகிறது. நல்லவனுக உள்ள அவன் விசுவாசகாதகனின் தொடர்பால் பெண்ணீடுபாடு கொண்டவனுகிருன். "சிலைமதன் சிங்காரத்தைச் சிறப்பென உரைத்தல் நன்ருே? (4 : 2) எனக் கசந்த அவனே, பின்னர் (5 : 1ல்) "அல்லல்செய் மதனன் வாளிக்கு அகப்படாதவரும் உண்டோ?" என்று பேசுகிருன் அதன் விளைவாகத் தனது நல்ல நண்பர்களிடமும் வெறுப்புக்கொள்கிருன் விசுவாச காதகனின் உண்மையான இயல்பு தெரிந்ததும் உறுதியாகப் பழைய நன்னிலைக்கே மாறுகிருன் எனவே, இந்தப் பாத்திரத்திலும் இவனேடு தொடர்புபட்டவர்களின் பாத்திரங்களிலும், பல்வேறு சுவைகளை வெளிப்படுத்தும் நடிப்புக்குப் போதிய வாய்ப்பு இருக்கிறது.

தீயவர்களின்பக்கம் ஆர்ப்பாட்டம், போலித்தனம் சூழ்ச்சி, கட்சி தாவல் என்னும் போக்குகளைப் கொண்டிருக்கிறது; நல்லவர்களின் பக்கம் அமைதி, நல்லவைகளைப் பற்றிய சிந்தனை. தீமைக்கு எதிராகத் திட்டமிடுதல், மனம் திரும்பல் என்னும் போக்குகளைக் கொண்டிருக்கிறது, இருக்கவே,-நிகழ்ச்சிகளால் மட்டுமன்றி, உணர்ச்சிகளாலும் நாடக உட்கருத்தை வெளிப்படுத்த வேண்டிய அவசியம் நடிகர்களுக்கு ஏற்பட்டு- நடிப்புக்குப் பெரிய வாய்ப்பு உண்டாகிறது.

பிரதாபசந்திரன்

பிரதாபசத்திர விலாச நாடகத்தின் பாத்திரப் படைப்பைப் பொறுத்த அளவில, முழுக்க முழுக்க எதார்த்த நோக்கே கையாளப்பட்டுள்ளது நம் மக்களுக்கு நாட்டுப்பற்று இல்லாததாலே தான் நாம் வளமும் வளர்ச்சியும் குன்றிப் போனேம்' என்னும் குரலோடு நமக்கு அறிமுகமாகிருன் பிரதாபசநதிரன்.[20] ஆனுலும் விசுவாச காதகனின் நடிப்பில் மயங்கி, சோக்சுந்தரத்தின் மயக்கில் அவன் நிலைகுலைகிருன்; அவனுடைய நண்பர்களும் விசுவாச காதகனிடமிருந்து பிரிந்த சிலரும் தீவிரமாக முயன்றதன் பயனுக அந்தக் குழியிலிருந்து அவன் மீள்கிருன். நல்லவன், வழி தவறியவன், மனம் திரும்பியவன் என்னும் மூன்று நிலைகளில் அமைகிறது பிரதாபசந்திரனின் பாத்திரம்.

---

20. பிரதாப சந்திர விலாசம்: அங்கம் 1; களம் 1

நல்லவன் கெட்டுப்போனான் என்பதை நம்பும் உலகம், அவன் மீண்டும் நல்லவனுனன் என்பதை எளிதில் ஏற்பதில்லை ''வாழ்ந்தவன் கெட்டால் வறையோட்டுக்கும் ஆகான்'' என்பதே மக்களின் கணிப்பு. ஆனால், இவன் எளிதில் ஏமாந்துவிடக் கூடியவன் என்பது பாவாடைசித்தர் மூலமாக முன்கூட்டியே (''மெத்தச் சிறுபிள்ளை'' என்று) தெரிவிக்கப்பட்டது போலவே [21]பிரதாபசந்திரன் ஒழுக்கொடு புணர்ந்த விழுக்குடிப் பிறந்து கல்வியாலும் உயர் எண்ணங்களாலும் ஓங்கியவனுகையால், வீழ்ந்தாலும் எழுந்திடுவான் என்னும் குறிப்பும் பலர் வாயிலாகவும் நிகழ்ச்சிகள் மூலமாகவும் வெளியிடப்படுகிறது

நாட்டுப்பற்றும், நாட்டின் பல்வேறுதுறை முன்னேற்றங்களில் நாட்டமும் உடையவனுக முதன்முதலில் பிரதாபனைச் சந்திக்கிறோம். விசுவாசகாதகன் தன்னுடன் ஒருசாலை மாணுக்கன் என்று உரிமை பாராட்டி அழைப்பு விடுத்துச் சென்றபின், பிரதாபனின் நண்பர்கள், விசுவாசகாதகன் ஒழுக்கக்கேடன் என்று விவரித்து அவன் விருந்துக்குப் போகவேண்டாம் என்று தடுக்கின்றூர்கள். அவர்களை மறுத்துரைதது, கட்டாயம் போகவே வேண்டும் என்று வலியுறுத்துகையில்,

> நன்னடை இல்லா னேனும்,
> நயமுடன் நம்மை வேண்டி,
> அன்னவன் உரைத்த இன்சொற்கு
> அகத்தியம் போக லாமே! [22]

என்றே சொல்லுகிறான் அதாவது, விசுவாசகாதகனை அவன் நல்லவன் என்று நம்பவோ அப்படிச் சொல்லவோ இல்லை; வீடு தேடி விரும்பி வந்து அழைத்ததற்கு மரியாதை செலுத்த வேண்டும்' என்றே சொல்லுகிறான்' இவனுடைய தற்காலிக மயக்கம் தன்னுடைய அனுபவக் குறைவாலும் விசுவாசகாதகனின் தந்திரப் பேச்சு நடைகளாலும் ஏற்பட்டது என்பதைப் பிரதாபசந்திரனே நாடகத்தின் இறுதிக்காட்சி (அங்கம் 12; களம் 4) யில் ஒப்புக்கொள்கிறான்.

இவனுடைய நடையில், இடையிலே தற்காலிகமாக ஏற்பட்ட தளர்ச்சியும் எதார்த்தமான மனித மனப்போக்குக்கு இசையவே சித்திரிக்கப்படுகிறது: கல்வியும் செல்வமும் நற்குணமும் உடை

---

21. பிரதாப சந்திா விலாசம்' அங்கம் 2; களம் 2
22. பிரதாப சந்திர விலாசம்' அங்கம் 3: களம் 1

யவன் பிரதாபசந்திரன். அவன் மற்ற இன்பங்களை அனுபவித்தவனாயினும் பெண்ணின்பத்தை அனுபவித்தவனல்லன். அதனாலேயே விசுவாசகாதகன் அதை அவன் முன் காட்டி அவனை மயக்க முயல்கிறான். முதல் விருந்துச் சந்திப்பிலேயே காமப் பாட்டுப் பாடும் விசுவாசகாதகனை, "அண்ணே, லோகத்தில் தங்கள் தங்கள் இஷ்ட தேவதையின் பேரில் சாகித்தியம்செய்வது வழக்கம் நீங்கள் மன்மதன் பேரில் செய்திருப்பதைப் பார்த்தால் அவனே உங்கள் இஷ்டதேவதை போலிருக்கிறது!" என்று கிண்டல் செய்தான்.[23] சோக்சுந்தரத்தின் காமப்பாடலைக் கேட்டபோதும், "நலமுறும் ஒழுக்கம் தன்னை நவில்வது நன்மையன்றிச் சிலைமதன் சிங்காரத்தைச் சிறப்பென உரைத்தல் நன்றோ?" என்று முணுமுணுத்தான்.[24] ஆனாலும், விசுவாசகாதகனின் நடிப்பாலும் சோக்சுந்தரத்தின் காமச் சேட்டைகளாலும் அவனுடைய முதிரா இளமை (Adolescence) திசை மாறிவிடுகிறது.

கல்வி இருந்தும்என்? கடலைப் போல்பெருஞ்
செல்வம் இருந்தும்என்? திறம் இருந்தும்என்?
வில்வளை வுற்றதன் புருவ வெம்மையால்
வெல்விழி அன்புநம் மீதில் லாமலே?[25]

என்று தன்னைத்தானே அவன் நொந்துகொள்ளும்போது இந்த மாறுதல் தெளிவாகப் புலப்படுகிறது. 'கல்வியாலோ பொருளாலோ பயனில்லை, — காதலே தேவை' என்று புதுக்குரல் கொடுக்கும் இவன், "வீரியமுடனே ஆளும் விஜய மன்னவர்களுக்கும் காரியம் கல்வியின்றிக் கனவிலும்முடியாது. அண்ணே!" என்று உறுதியாக அறுதியிட்டவன்[26] என்பது கவனிக்கத்தக்கது. நல்லவர் குழலில் நல்லவனாக இருந்த பிரதாபன், விசுவாசகாதகன் மற்றும் வேசியர் சேர்க்கையால் மனம் திரிந்த வரலாறு, "மனநலம் நன்குடையராயினும் சான்றோர்க்கு இனநலம் ஏமாப்பு உடைத்து" என்னும் கருத்துக்கே[27] இலக்கியமாகிறது.

---

23. பிரதாபசந்திர விலாசம் - அங்கம் 4 ; களம் 1
24 மேற்படி
25. பிரதாபசந்திர விலாசம் : அங்கம் 5 ; களம் 1
26. ,, ,, 3 ; ,, 1
27. திருக்குறள் : சிற்றினஞ்சேராமை, 8

பொய்யடிமையில்லாத புலவர் யாவர்?

திரு. அ. தட்சிணுமூர்த்தி, பி. ஏ. (ஆனர்சு) பி. இடி.
திருபுட்பம் கல்லூரி, பூண்டி.

தேவார ஆசிரியருள் ஒருவராம் தம்பிரான் தோழர் சுந்தர மூர்த்தி நாயனர் திருவாய் மலர்ந்தருளியது "திருத்தொண்டத் தொகை" யாகும் நம்பியாண்டார் நம்பிகளின் திருத்தொண்டர் திருவந்தாதிக்கும் சேக்கிழாரின் பெரிய புராணத்திற்கும் அடிப் படையானதிதுவே. இதன்கண் பதினெரு பாடல்கள் இடம் பெறும். சைவநெறியின் வளர்ச்சிக்காகத் தம் புலமைத் திறத் தாலும், செயற்கரிய செயல்களாலும் கடிதுழைத்த சிவநேயச் செம்மல்கட்கு வணக்கம் கூறுவதே இதன் நோக்கமாகும். அடியவர் ஒவ்வொருவரது இயற்பெயரையோ சிறப்புப் பெய ரையோ சுட்டித் தம் அடிமைத் திறத்தை வெளிப்படுத்தும் சுந்தரர், பெயர் குறிப்பிடவியலாது பேரெண்ணிக்கையினராக விருந்த அப்பாலும் அடிசேர்ந்தார், முப்போதும் திருமேனி தீண்டுவார், முழுநீறு பூசிய முனிவர் முதலிய தொகையடியார்க்கும் வணக்கம் கூறுவார். இத்தொகையின் ஏழாம் பாடலில் "பொய்யடிமை யில்லாத புலவர்க்கும் அடியேன்" என்று குறிப்பிட்டுள்ளார். இத்தொடர் கூறுவது தனியடியாரொருவரையா, தொகை யடியார்களையாவென்பது பற்றித் தமிழறிஞரிடையே கருத்து வேறுபாடு இருந்து வருகிறது இதுபற்றி ஆய்வது என் நோக்கமாகும்.

சுந்தரர் நோக்கம்; திருத்தொண்டத் தொகையின் அமைப் பினை நன்கு நோக்குவார். தொகையடியார்களைத் தனியொரு பாடலிலேயே தொகுத்துக் கூறுவதே ஆசிரியரின் நோக்கமாக விருந்துள்ள தென்பதை யுணரலாம் இந்நூலின் பத்தாஞ் செய்யுளில் ஏழு தொகையடியார்கள் இடம் பெற்றுள்ளனர். இவர்களைத் தவிர வேறு தொகையடியார்களையும் வணங்கும் கருத்துடையாரெனின் இச்செய்யுளிலேயோ அடுத்து வரும் செய்யுளிலேயோ குறிப்பிட்டிருப்பார். "பொய்யடிமையில்லாத புலவர்" என்பது அவ்வாறன்றித் தனியடியார் பலரைக் குறிக் கும் ஏழாவது செய்யுளில் இடம்பெறுவதால் பெயர் கூறி விளக் கும் தேவையற்ற அளவுக்கு மக்களால் நன்கு அறியப்பட்ட வோர் சிவநேயச் செல்வராக விருக்க இடம் ஏற்படுகிறது.

தில்லை வாழந்தணர் : "தில்லைவாழ்அந்தணர்" தொகையடியார் களேனும் தனியடியாரோடு சேர்த்துக் கூறப்பட்டதுபோல் இவர்களும் கூறப்பட்டிருக்கலாம் என்று இதற்கு விளக்கம்கூற முற்படலாம். 'அந்தணர்' எனும் சொல் ஒருசார் மக்களை மட்டுமன்றி இறைவனையும் குறிப்பதாகவே பண்டு தொட்டு வழங்கி வந்துள்ளது. 'அறவாழி அந்தணன்' எனத் தெய்வப் புலவரும் குறித்தார் சிவபெருமானை 'வேதியன்', 'புரிநூல் மார்பன்" 'அந்தணன்' என அருளாளர்கள் வழங்கியுள்ள னர். தில்லையையே சைவர்கள் 'கோயில்' என்று சிறப்புடன் போற்றுவர். எனவே தில்லையில் குடிகொண்டு தன் திருக் கூத்தால் அனைத்துலகையும் இயக்கிடும் நடராசப் பெருமானை முன் குறிக்கும் திருவுள்ளத்துடன் அவனடியார்கட்கு வணக்கம் கூறித் தொடங்கினர் எனலாம். அவ்வாறன்றி இத்தொடர் தில்லை மூவாயிரவராம் தொகையடியார்களையே குறிப்பதாகக் கொண்டாலும் தில்லைப்பதிவாழும் அச் சிறப்பினுல் அன்னோர் தொகையடியாரேனும் முதற்கண்கூறும் தகுதி நோக்கி அவ்வாறு கூறினர் என்று கொள்ளினும் இழுக்காகாது. அதுவுமன்றி இறைவன் அடியெடுத்துக் கொடுததததனல் முதலிற் கூறினு ரென்றலுமாம்.

நாயன்மார் எத்துணையர் ? சுந்தரர் பெருமான் நாயன்மார்களின் எண்ணிக்கை அறுபத்து மூன்ருகவே இருக்கவேண்டுமென்ற குறிப்புடையாரல்லர். சமண சமயப் பெரியாரின் எண்ணிக்கை போலிருக்க வேண்டுமென்பதற்காக நம்பியாண்டார் நம்பிகள் ஏற்படுத்திய வரையறையே அது. சுந்தரரையும் அவரது பெற்ருேர் இருவரையும் தனியடியார்கள் பட்டியலில் சேர்த்து, பொய்யடிமையில்லாத புலவரையும் தில்லை வாழந்தணரையும் தொகையடியாருடன் சேர்த்து 63 தனியடியார்களையும் 9 தொகை யடியார்களையும் காட்டினர். பொய்யடிமையில்லாத புலவரைத் தனியடியாராக்கினுல் நாயன்மார்கள் எண்ணிக்கை 64 ஆகிவிடும். எனவே தான் இவர்கள் சங்கப் புலவராம் 49 பேர் என்று கொண்டார். சுந்தரர் சடையன், இசைஞானி என்னும் இரு வரையும் தனியடியார்களாகக் கொண்டு அவர்கட்கும் வணக்கம் கூறும் கருத்துடையாரெனின் அவர்கள் பற்றிக் கூறி ஏனைய இடங்களில் கூறுவதுபோல் "அடியேன்" என்று குறிப்பிட்டி ருப்பார் தனித்தனியே பெயர் கூறி வணங்கும் பொழுது. "இல்லையேயென்னுத இயற்பகைக்குமடியேன்" என்பதுபோல் அடியேன் என்ற சொல்லை ஒவ்வொருவர்க்கும் சேர்த்தும், ஒரு வர்க்கு மேற்பட்ட பெரியார்களை இணைத்துக்கூறும் பொழுது

'வரிவளையாள் மானிக்கும் நேசனுக்கும் அடியேன்'' என்பதுபோல், எண்ணும்மை கொடுத்தும் குறிப்பிடுகின்றார். ''என்னவனும் அரனடியே அடைந்திட்ட சடையன், இசைஞானி காதலன் திருநாவலர்கோன்'' எனத்தான் இன்னாரின் மகன் என்பதனைப் பெருமிதத்தோடு கூறி ''என்னுடைய அடிமை கேட்டுவப்பார் சிவனருளுக்குப் பாத்திரமானவர்'' என்று சம்பந்தர் போல் கூறுவதே அவர் கருத்து: 'சடையனுக்கும் இசை ஞானிக்கும் அடியேன்'' என்று குறித்தாரல்லர். சுந்தரருடைய பெற்றோர்களும் நாயன்மார் வரிசையில் இடம் பெறத் தகுதியுடையாரெனின் அப்பர் சம்பந்தர் முதலிய ஏனைய பெரியார்களின் பெற்றோர்க்கும் அத்தகுதி உண்டன்றோ! எனவே நம்பியாண்டார் நம்பிகள் 63 என்ற எண்ணிக்கை அமைய வேண்டுமென்பதற்காகவே ''பொய்யடிமையில்லாத புலவர்'' என்பதனைத் தொகையடியார் பற்றியது என்று முடிவு செய்தார் எனக.

சங்கப் புலவர்களா? இனியொருசார் பெருமக்கள் இத்தொடர் மாணிக்க வாசகரைக் குறிக்கும் என்றனர். மணிவாசகப்பெருமான் சுந்தரர் காலத்திற்குப் பின்னால் முதலாம் வரகுண பாண்டியன் காலத்தில் வாழ்ந்தவர் எனவே அவரைக் குறிக்கவில்லையென்று பேராசிரியர். க. வெள்ளைவாரணனர் உள்ளிட்ட அறிஞர்கள் தெளிவு படுத்தி விட்டனர். இறையனர் களவியல் உரையாசிரியர் கடைச் சங்கத்திலிருந்தார் 49 புலவர் என்றார் நம்பியாண்டார் நம்பி இத்தொடர் அந்த 49 புலவர்களையும் குறிப்பதாய்க்கொண்டு

''தாரணியிற் பொய்மையில்லாத் தமிழ்ச் சங்கமதிற்கபிலர்
பரணர் நக்கீரர் முதல் நாற்பத்தொன்பது புலவோர்''

என விளக்கம் தந்து அன்னோர் திருவாலவாய் அரன் சேவடிக்கே பொருளமைத்து இன்பத் தமிழ் பாடும் புலவர்கள் எனப் பாராட்டினர். சங்கப் புலவர்கள் ஐந்நூற்றுக்கும் மேற்பட்டவர் என்றும், பல சமயத்தினர் என்றும், சமயச் சார்பாகவன்றி உலகியல் பற்றியே பாடிய பெருமைக்குரியவர் என்றும் அறிந்த நாம் நம்பிகளின் கூற்றை ஏற்கமாட்டோம். நம்பிகளின் திருவந்தாதியையே அடிப்படையாகக் கொண்டு பெரிய புராணம் பாடிய சேக்கிழாரே இதனை ஏற்காது சங்கம் என்ற சொல்லைக் கூடப் பயன் படுத்தாது புலவர்கள் என்றே பொதுவாகக் கூறினர்.

"செய்யுள்நிகழ் சொற்றெளிவும் செவ்வியநூல் பலநோக்கும்
மெய்யுணர்வின் பயனிதுவே யெனத்துணிந்து
விளங்கியொளிர்
மையணியும் கண்டத்தார் மலரடிக்கே ஆளானர்
பொய்யடிமையில்லாத புலவரெனப் புகழ்மிக்கார்"
பொற்பமைந்த அரவாரும் புரிசடையார் தமையல்லால்
சொற்பதங்கள் வாய்திறவாத் தொண்டுநெறித் தலைநின்ற
பெற்றியினில் மெய்யடிமை யுடையவராம் பெரும்புலவர்"

எனச் சேக்கிழார் கூறுதல் காண்மின்! எனவே சேக்கிழார் இத்தொடர் தொகையடியார் பற்றியதெனக் கருதினும் சங்கப் புலவரெனக் கருதாமை தெளிவாகிறது.

யார் அந்தப் பெருமகனர்? பரந்துபட்ட சங்க காலத்தில் ஐந்நூற்றுவர்க்கு மேற்பட்ட புலவர்கள் வாழ்ந்துள்ளனர். அவர்களில் நக்கீரர் ஒருவர் மட்டுமே பண்டுதொட்டுச் சிவபெருமானேடு இணைத்துப் பேசப்படுகின்றார். சங்கத்தில் வீற்றிருந்த புலவர்களில் நக்கீரர் எதினும் உண்மைகாணுவதே கருத்துடையவராய் விளங்கினர் என்றும், "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு' என்னும் கொள்கையினல் "கொங்குதேர் வாழ்க்கை" யென்னும் பாடலைப் பாடித் தம்மோடு வாதிட்டவர் சிவபெருமானேயென்பதனை அறிந்த பிறகும் கூட அஞ்சாது "நெற்றிக் கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என நாட்டினர் எனவும், இறைவனுடைய நெற்றிக் கண்ணழலால் வெதும்பிய புலவர் பொற்றாமரைக் குளத்தில் வீழ்ந்து - பிறகு தம் பிழையுணர்ந்து சிவபெருமானுக்கு அடிமையானர் எனவும் அவர் பற்றிய கதை பிற்காலத்தில் உருவாயிற்று என்பதனை யாவரும் அறிகுவர் அப்பர் பெருமானுக்கு முன்பே இக்கதை மக்களிடையே பரவியிருந்தமையை, "நன்பாட்டுப் புலவனுய்ச் சங்கமேறி, கற்கைக்கிழி தருமிக்கருளினேன் காண்" என்னும் அப்பரடிகளின் கூற்றாலுணரலாம் இத்தொடரில் நக்கீரர் பெயர் இல்லாவிட்டாலும் அப்போது அவரோடு சேர்த்தே இக்கதை வழங்கிற்றெனக் கோடல் தவருகாது. எனவே பொய்மைக்கு அடிமையாகாது சிவபெருமானின் பாடலிலேயே குற்றங்கண்டு, பின் சிவனுக்கு அடிமையான அவரைச் சிறப்பாகக் குறித்திடுதல் கருதியே, **பொய்யடிமையில்லாத புலவர்** என்று பாராட்டியுள்ளார் எனக் கருத இடமேற்படுகிறது. இதனை அறிஞருலகம் மேலும் ஆய்ந்திடுமாக.

தமிழ் மொழி வளர்ச்சியில் ஒரு கூறு

இப்பகுதியில் இப்போது மக்கள் பயன்படுத்தும் உடை வகைகளுக்கும், இருப்பிடப் பொருள்களுக்கும், ஊர்திகளுக்கும் ஏற்ற தமிழ்ச் சொற்கள் வெளியிடப்படுகின்றன. இதற்குமுன் வெளியிட்ட சொற்களுக்கு அறிஞர்கள் கருத்துரை கூறி உதவியதுபோல் இப்பகுதிக்கும் கருத்துரை கூற வேண்டுகிறேம். இதுவரையில் அறிஞர்கள் எழுதி விடுத்த கருத்துக்களுக்கு நன்றி செலுத்துகிறேம். இறுதிப் பட்டியல் உருவாக்கும்போது அக்கருத்துரைகளை மனத்தில் கொண்டு செயல்படுவோம் என்று உறுதி கூறுகிறேம்.

Furniture — இருப்பிடப் பொருள் அல்லது இருக்கைப் பொருள்கள்

Table — மேலகை. மேலே உள்ள பலகை என்ற தொடரில் "மே" என்பதனையும், பலகை என்ற சொல்லில் "லகை" என்பதனையும் எடுத்துக்கொண்டு மேலகை என்ற சொல் உருவாக்கப்பட்டது. மிசைப் பலகை என்று கூறலாம்.

Desk — சாய்வுப் பலகை

Bench — இருக்கைப் பலகை

Chair — நாற்காலி

Black-Board — கரும்பலகை

Board-Stand — பலகை தாங்கி

Platform — மேடை

Rack — பேழை அறை

Shelf — நிலைப் பேழையின் படித்தட்டு நிலைப்பேழையின் அடுக்கு. அடுக்கு என்று சுருங்கச் சொல்லலும் தகும்.

Almirah — நிலைப் பேழை

Screen — திரை

உடைகள் :

Shirt — சட்டை, கஞ்சுகம். மேலாடை, கஞ்சுகம், மெய்ப்பை. அங்கி முதலான சொற்பொருளின் வேருக அளவோடு அணிவிளங்கச் செய்யப்பட்டு ஆடவர் பெண்டிர் சிறுவர் சிறுமியர் அணியும் உடைகளுக்குப் பொதுவாக வழங்கி வந்தலின் 'சட்டை' என்ற பிறமொழிச் சொல்லேத் திசைமொழியாக ஏற்றுக் கொள்ளலாம். அறிஞர்கள் அது பற்றிக் கருத்தறிவிக்க வேண்டுகிரேம்.

Coat — மீச்சட்டை, (இதனே மேற்சட்டை எனக் கூறலாமாயினும் பொதுவாகச் சட்டையினே மேற்சட்டை என வழங்கும் வழக்கு வந்துவிட்டமையின் இதனே இவ்வாறு வழங்கலாம் எனக் கொள்ளப்பட்டது.

Dhoti — வேட்டி. வேஷ்டி என்று வழங்குதல் தவறு. நீளமாக நெய்து வெட்டப்படுவது வேட்டி. உடுக்கை என்பதும் பொருந்தும்.

Full-Pant	—	முழுக்கால் சட்டை
Tight Pant	—	இறுகிய காற்சட்டை
Half-Pant Half-Drawer	—	அரைக்கால் சட்டை
Trouser	—	கால் சட்டை
Under-wear	—	உட்காற் சட்டை
Banian	—	அகச் சட்டை, உள்சட்டை
Body Bracer	—	கச்சு
Slack Shirt	—	தளர் சட்டை
Tie	—	கழுத்துக் கச்சு
Collar	—	கழுத்துப்பட்டை
Belt	—	அரைப் பட்டிகை
Cap	—	தலேயுறை, மூடி
Turban	—	தலேப்பாகை

Hat — விளிம்பு உறை
Helmet — தலைக்காப்புடை
ரவிக்கை — மகளிர் சட்டை
Gown (கவுன்) — மகளிர் முழுச் சட்டை

ஊர்திகள்

Cycle — மிதி வண்டி
Rickshaw — இழு வண்டி
Cycle Rickshaw — மிதி இழுவண்டி
Motor Cycle — மிதியுந்துவண்டி
Motor Car — உந்து வண்டி
Bus — பேருந்து
Lorry — சரக்கு உந்து
Scooter — பிறையுந்து (உந்து வண்டிக்குரியது போன்ற பொறிகளோடு முன் பகுதியில் பிறைவடிவாக இருப்பது
Taxi — வாடகை உந்து
Pleasure Car — மகிழ் உந்து.
Train — புகைவண்டி, தொடர் வண்டி
Aeroplane — வானூர்தி

பொழிலன்பர்கள் சுவைக்க

குமர குருபரரின் நட்டம்.

" குமர குருபர அடிகளார் தாம்பாடிய பண்டார மும்மணிக் கோவையில் தாம் குருவிடம் போம்பொழுது சீவனைச் சென்றும் மீண்டும் திரும்பி வரும்பொழுது தாம் ஒரு மாத்திரை குறையப் பெற்று நட்டமடைந்ததாகவும் கூறியுள்ளார்.

இதன் கருத்து சீவனைச் சென்ற அவர் குருவினரால் சீவ போதங்கெட்டுச் சிவபோதம் பெற்றுராதலின் சீவன் என்ற சொல்லின் இரண்டு மாத்திரையுடைய சீ என்னும் நெட்டெழுத்து ஒருமாத்திரை குறைந்து சிவன் என்னும் நிலையில் குருவருள் பெற்றுரென்பதாகும் "

23—4—1938-இல் திருப்பாதிரிப்புலியூர் ஞானியர் மடாலயத் தலைவர் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் சொற்பொழிவொன்றில் குறிப்பிட்டது